# அரசறிவியல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம்: 6.1

### முரண்பாடு வரைவிலக்கணமும் வகைப்படுத்தலும்

1. முரண்பாடு எனபது மனிதர்கள் சமூகக் குழுக்கள் அல்லது இரண்டு அரசுகள் அல்லது அதற்கு மேற்பட்டவைகளுக்களுக்கிடையில் காணப்படும் விசேடத்துவமான தொடர்பொன்றாகும்.
2. “முரண்பாடு என்பது தமக்கிடையில் ஒன்றுக்கொண்று பொருத்தமில்லாத நோக்கங்களை உடைய அல்லது அவ்வாறு சிந்திக்கும் இரு தரப்புக்கள் அல்லது நபர்கள் அல்லது சமூகக் குழு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் நிலவும் தொடர்பாகும்”. (பேராசிரியர் - கிறிஸ்டோபர் மிச்செலின்)
3. “முரண்பாடென்பது இரு தனிநபர்களுக்கிடையில் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் ஏற்படும் கருத்து முரண்பாட்டின் பெறுபேறாக எழும் நடவடிக்கை சார் பிரச்சனையாகும்” (A.S.பாலசூரிய)
4. “முரண்பாடு என்பது இருசாரார் அல்லது பல கட்சியினர் ஒரே நேரத்தில் அரிதாக உள்ள ஒரே வளத்தை தனதாக்கி கொள்ள முயல்வதால் ஏற்படும் நிலையாகும்” (பீற்றர் வொலஸ்டீன்)
5. ஒன்றுக்கொன்று முரணான கருத்துள்ள இருவர் அல்லது பலர் வாய்மொழியாக அல்லது உடல்ரீதியாக அல்லது ஆயுதங்களாக மேற்கொள்ளும் கிளர்ச்சி முரண்பாடாகும்.

### முரண்பாடு: எதிர்வாதம் - பிணக்கு என்பவற்றிலிருந்து வேறுபடும் விதம்

பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செலின் “சர்வதேச முரண்பாடுகளின் கட்டமைப்பு” (The Structure of International Conflict) (1981) என்ற கட்டுரையின் அர்தப்படுத்தலுக் கேற்ப முரண்பாடென்பது எதிர்வாதம், போட்டி, பிரச்சினை (பிணக்கு) போன்றவற்றில் இருந்து வேறுபட்டதாகும்.

1. அரசியல் மற்றும் சமூகக் கோட்பாடுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள படி எதிர்வாதம் போட்டி மற்றும் பிணக்கு என்பவற்றை மோதல்வரை நிலை மாற்றம் அடையக்கூடிய நிலைமையாகும்.
2. வன்முறைக்கும் அதனோடு தொடர்புடைய தரப்புக்களுக்கும் அழிவினைத்தரக் கூடிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கும் விளைவினைக் கொண்டிருப்பதனாலேயே முரண்பாடு எதிர்வாதம் பிணக்கில் இருந்து வேறுபடுகின்றது.
3. போட்டித் தன்மை, எதிர்வாதம், மற்றும் பிரச்சினை(பிணக்கு) ஆகியன மனித தொடர்புகளில் தொடர்ச்சியாக நிலவுவது.
4. போட்டித்தன்மை, எதிர்வாதம், பிணக்கு தவிர்க்கப்படமுடியாத, நபர்களுக்கிடையிலான மற்றும் சமூகக் குழுக்களுக்கிடையிலான தொடர்பாகும்.
5. முரண்பாட்டு தீர்வுமுறையில் கூறப்படுவது அவை தரப்புக்களுக்கு அந்யோன்யமான முறையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற முரண்பாடாக வளர்ச்சியடைவதனாலேயே தடுக்கப்படவேண்டும்.
6. ஆரம்ப மட்டத்தில் நோக்கும் போது நபர்களுக்கிடையிலும் முரண்பாடு தோன்றலாம்.
7. சமப்படுத்த முடியாத நோக்கங்கள் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்காக மனிதர் ஒவ்வொருவருக்கிடையிலும் மோதும் நோக்கங்களை நாடிச்செல்லும் போது முரண்பாடு தோன்றும்.

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சுமி ஜனேந்திரன், ஆசிரியர் - அரசறிவியல், (யா/சுண்டிக்குளி மகளிர் சல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

முரண்பாட்டின் செயற்பாடுகளின் வழிகள்

- முரண்பாட்டின் சாதகமான பக்கசெயற்பாடு
- முரண்பாட்டின் பாதகமான பக்கசெயற்பாடு

| முரண்பாட்டின் சாதகமான செயற்பாடுகள் | |
|---|---|
| **1940 இல் ஜோர்ஜ்சீமெல் (சமூகவியலாளர்) முரண்பாட்டின் சமூகவியல் நூலில்** | **1956 இல் லூவிஸ் கோசர் (சமூகவியலாளர்) சமூக முரண்பாட்டின் செயற்பாடுகள் (கட்டுரை)** |
| 1. சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் இருப்பதை தவிர்க்கும் | 1. முரண்பாடு சிறப்பாக ஒழுங்கமையாத சமூகக் குழுக்களுக்கிடையிலான மன சஞ்சலத்தினை தீர்க்க உதவுவதால் ஒற்றுமை ஏற்பட வழிவகுக்கும். |
| 2. சமூகப்பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை தீர்க்க வலியுறுத்தும் | 2. சமூக வரலாற்றின் முன்னோக்கிய பயணத்தின் உந்து சக்தியாகும் (வர்க்க முரண்பாடு - ஊடயளள ஊழகெடைஉவ) |
| 3. நபர்களும் சமூகமும் மாற்றமடைய பங்களிக்கும் | 3. ஒன்றுக்கொன்று நேரெதிரான சமூக வர்க்கங்களிடையே வரலாறு முழுவதும் ஏற்பட்டுள்ள எதிர்வாதங்கள் முரண்பாடுகள் சாரணமாக சமூகம் வரலாற்று நிலைமாற்றத்திற்கு உள்ளாகும். |
| 4. சமூகக்குழுக்களின் ஒற்றுமைத் தன்மையினை வலுப்படுத்துகின்றது. | |

**முரண்பாட்டின் பாதகமான (பார்வை) எதிர்மறை செயற்பாடுகள்**

1. வன்முறைகள்
2. மனிதக் கொலைகள்
3. மனிதப் படுகொலைகள்
4. ஆட்கடத்தல்
5. பொருளாதாரா அழிவுகள்

தொகுப்பு :- திருமதி. பிரமாலட்சுமி ஜனேந்திரன், ஆசிரியர் - அரசறிவியல், (யா/சுண்டிக்குளி மகளிர் சல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**முரண்பாட்டின் பாதகமான விளைவுகளுக்கான உதாரணங்கள்**

1. முதலாம் இரண்டாம் உலகமகாயுத்தங்கள்
2. நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள் மற்றும் ஆயுத முரண்பாடுகள்
3. உள்ளக சிவில் யுத்தங்கள்
4. வன்முறைசார் இனமுரண்பாடுகள்
5. பாரிய வல்லரசுகளக்கிடையிலான பாரிய அழிவினை ஏற்படுத்தக் கூடிய அணுவாயுத மோதல்வரை செல்வதற்கு அண்மைக்காலம் வரை காணப்பட்ட வாய்ப்புகள்
6. உலகளவில் பரவி வருகின்ற பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தங்கள்.

**வினாக்கள்**

1. முரண்பாடு என்பதை வரைவிலக்கணம் செய்து முரண்பாட்டின் சாதகபாதக விளைவுகளை பரிசீலிக்குக?

**முரண்பாட்டின் வகைகள்**

1. எளிய வகைப்படுத்தல்
2. செயற்பாட்டுவாத வகைப்படுத்தல்
3. அரசியல் வகைப்படுத்தல்

**எளியவகை 4 வகைப்படும்**

1. ஆளக முரண்பாடு
2. ஆளிடை முரண்பாடு
3. குழுவினுள்ளான முரண்பாடு
4. குழுக்களுக்கிடையிலான முரண்பாடு


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1. ஆளக முரண்பாடு (Intrapersonal Conflict)
    - ஒவ்வொரு நபரின் உள்ளத்தினுள் ஏற்படும் முரண்பாடு
    - மனிதனின் இயற்கையிலான அனுபவம்
    - வாழ்வின் பல சந்தர்ப்பத்தில் அபிலாசைகளை அடிப்படையாக கொண்டிருக்கும்.

2. ஆளிடை முரண்பாடு (Inter Personal Conflict)
    - இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களுகிடையில் ஏற்படும்
    - போட்டி, வேற்றுமை. எதிர்க்கருத்துக்களை அடிப்படையாக கொண்டது
    - ஆளிடை செயற்பாடுகளால் உருவாவது

3. குழுவினுள்ளான முரண்பாடு (Intra Group Conflict)
    - சமூக குழுக்களுக்கிடையில் ஏற்படுவது
    - குழுக்களின் பல அபிலாசைகள் நோக்கங்களைக் கொண்டது

4. குழுக்களுக்கிடையிலான முரண்பாடு (Inter Group Conflict)
    - இரண்டு குழுக்கள் அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## செயற்பாட்டு வாத வகைப்படுத்தல் (Functionalist Classification)

**(மோர்டின் டோயஷின் வகைப்படுத்தல் - அமெரிக்க சமூக உளவியியலாளர்)**

**நேர்க்கணிய முரண்பாடு (நியாயப்படுத்தக் கூடியது - Constructive Conflict)**

1. முரண்பாட்டில் பங்கெடுப்போர் நன்மை அடைவதாக எண்ணதல்
2. முரண்பாட்டின் விளைவில் திருப்தி
3. முடிவு நேர்க்கணியமானது
4. சாதகமான நிறைவு
5. ஆக்கபூர்வமானது
6. முரண்பாடு தீரும்
7. ஒற்றுமை, ஆக்கமான காரணிகளின் பங்களிப்பு
8. வாய்ப்பு, திறமை அர்ப்பணிப்பு தரப்பினருக்கு கிடைக்கும்

**எதிர்க்கணிய முரண்பாடு (அழிவு தரக்கூடியது - Destructurive Confilict)**

1. பாதகமான பெறுபேறு
2. விளைவில் அதிருப்தி
3. முடிவுக்கு வராத முடிவு
4. மேலும் பரந்து விரிவடையும்
5. தனிமைப்பட்டு விருத்தியடையும் புதிய சக்தி
6. இயக்கத்தன்மை (Dynamic) காணப்பட்டு ஒன்றைப் பற்றிக் கொண்டு வளரும்

   உதாரணம்: இலங்கை இனமுரண்பாடு

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல் வகைப்படுத்தல் (Political Conflict)

(பேராசிரியர் பீற்றர் ஹொலனஸ் - **Peter Wallenstein**)

**அரசுகளுக்கிடையிலான முரண்பாடு (Interstate Conflict)**

சர்வதேச அரசியலில் அரசுகளுக்கிடையில் ஏற்படுவது (நலன்கள்)

- பனிப்போர் (Cold War)
- எல்லைப் போர்

**அரச உருவாக்க முரண்பாடுகள் (அரச நிர்மாண - State Formation Conflict)**

- அரசொன்றினில் வாழும் மக்களில் குறிப்பிட்ட வீதத்தினர் ஓரங்கட்டப்பட்டால்
- ஏதேனும் பூமி பிரதேச உரிமை கோரி முரண்படல்
- தனி அரசு கோரிக்கை
- பிரதேச அடையாள முரண்பாடு
- பிரிந்து செல்லும் எண்ணத்திலான முரண்பாடு
- வர்க்க அரசியல் இயக்கங்கள் என்பன அரசு உருவாக்க முரண்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும்.

**உள்நாட்டுட முரண்பாடு (அரசுக்குள்ளான முரண்பாடு - Intrastate Conflict)**

- நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, அச்சுறுத்தல் போன்றவற்றிற்காக இடம்பெறும்
- உள்ளக முரண்பாடு அதிகரிக்க சிவில்யுத்தமாக மாறும்
- உள்ளக முரண்பாட்டிற்கான காரணிகள்
  1. கட்டமைப்பு காரணிகள்
  2. பொருளாதார சமூக காரணிகள்
  3. அரசியல் காரணிகள்
  4. கலாச்சார காரணிகள்

இவ்வாறாக முரண்பாடு சார் வகைகள் பிரிக்கப்படுகின்றது.

### வினாக்கள்

1. முரண்பாட்டின் பல்வேறு வகைகளை தெளிவுபடுத்துக?


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk